27.11.2024

S.C.No. 21/2024

PW. 15 Tr. டாக்டர். பெஞ்சமின் ஜெபராஜ்

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்) :-</u>**

இந்த வழக்கு சம்பந்தப்பட்ட சடலத்தை ஆசாாிபள்ளம் அரசு மருத்துவமனையில் எத்தனை மணிக்கு உள்ளே எடுத்தோம் என்றால் 29.08.2023 அன்று காலை 11.00 மணிக்கு சடலம் பிணவறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. காலை 11.00 மணிக்கு சடலம் பிணவறைக்கு எங்கிருந்து அனுப்பப்பட்டது என்றால் அவசர சிகிச்சை பிாிவிலிருந்து பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு, உடல் பிணவறைக்கு அனுப்பப்படும். அந்த உடல் காலை 11.00 மணிக்கு ஆசாாிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தபோது, அந்த உடலை பாிசோதித்த மருத்துவர் நான்தானா என்றால் இல்லை. நான் பாிசோதனை செய்தபோது அந்த உடலில் ஆடைகள் இருந்ததா என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. அறிக்கையில் அது குறித்து நான் குறிக்கவில்லை. அந்த உடலில் நான் ஏற்கனவே சொல்லியதுபோல 16 இடங்களில் காயங்கள் இருந்தது என்றால் சரிதான். நான் குறிப்பிட்டுள்ள 16 காயங்களில் 3 காயங்கள் கம்பி போன்ற ஆயுதத்தினால் ஏற்பட்ட காயங்கள் என்றால் சரியல்ல. எல்லா காயங்களும் கம்பி போன்ற ஆயுதத்தினால் ஏற்பட்டிருக்க கூடும். நான் சொன்ன காயங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களாலும் ஏற்பட்டிருக்க வாய்ப்பு

உண்டு என்றால் சரிதான். கூர்மையான கம்பியால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு என்றால் மழுங்கிய முனை உள்ள கம்பியால் அந்த காயங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. ஒரு நபர் இன்னொரு நபரை ஆவேசமாகவோ, வெறிக்கொண்டோ, சுமார் 1 1/4 அடி நீளமுள்ள ஒரு ஸ்கூரு டிரைவரை வைத்து, ஆவேசமாக கழுத்துப்பகுதியிலோ, தாடைப்பகுதியிலோ, குத்தும்போது அது ஒரு பக்கம் உள்ளே போய் மறு பக்கம் வெளியே வர வாய்ப்புண்டு என்றால் எல்லா முறையிலும் அப்படி இருக்க வேண்டும் என அவசியமில்லை. ஆனால் வாய்ப்புண்டு. நான் பாிசோதித்த உடலில் அப்படி குத்தி வெளியே வரவில்லை என்றால் வலது காது மடலில் மட்டும் அவ்வாறு வந்துள்ளது. காது மடலில் ஏற்பட்டிருக்க கூடிய அந்த காயத்தின் காரணமாக அந்த நபருக்கு உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். எத்தனை மணிக்கு பிரேத பாிசோதனை முடித்து பிரேதத்தை திருப்பி கொடுத்தோம் என்றால் 2.00 மணிக்கு பிரேத பாிசோதனை முடிந்தது. எத்தனை மணி என்று ஞாபகம் இல்லை. நான் பாிசோதித்த உடலில் இருந்த 16 காயங்களில் ஆயுதத்தினால் ஏற்பட்டதை தவிர வேறு காயங்கள் கிடையாது என்றால் சரியல்ல. உரசல் காயங்கள் ஏற்பட்டுள்ளன. இடது பெருவிரலில் ஒரு சிதைந்த காயம் ஏற்பட்டிருந்தது. காயங்கள் எண். 9, 10, 12, 14 மற்றும் 15 ஆகியவை கீழே விழுந்தாலோ, ஏதாவது கடினமான தரையில் உரசினாலோ ஏற்பட கூடிய காயங்கள். காயம் எண். 13 இடது பெருவிரலில் இருந்த சிதைந்த காயம் ஒரு கட்டையால் அடித்து, சிதைந்து ஏற்படவும் வாய்ப்புண்டு என்றால் சரிதான். நான் போலீசார் அறிவுரையின் படி அவர்களுடைய வழக்கிற்காக வலு சேர்க்கும் விதமாக நீதிமன்றத்தில் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சடலத்தில் இருந்த ஆடையை வேண்டுமென்று மறைப்பதற்காக போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.